II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 337 / 2023**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12.11.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வஜ்ரவேலு | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–

வழக்கு சொத்து உரிமையானது என்று பரிகாரம் கேட்டுள்ளேன். விளம்புகை பரிகாரங்கள் தவர வேறு பரிகாரம் கேட்கவில்லையா என்றால் சொத்து எனக்கு உரிமையானது என்று தான் கேட்டுள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண்.115 ஆகும். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3041 1/2 சதுர அடியாகும். வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் எனக்கு தெரியும். மேற்கே திருவேங்கடம் வீடு, கிழக்கே ராமானுஜகூடம் தெரு, வடக்கே பத்மா டீச்சர் வீடு இருந்தது. தற்போது விற்றுவிட்டார். தெற்கே ராஜா அக்கரகாரம் தெருவாகும். கிழக்கு மேற்கு 38 1/2 அடி, வடக்கு தெற்கு 86 அடியாகும். எனது வழக்குரையில் 1641 1/2 சதுர அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் வாசுதேவன், செந்தாமரை கண்ணன் ஆகியோருக்கு ஒதுக்கப்படும் சொத்து என்று உள்ளது என்றால் சரிதான். அவர்கள் இருவரும் தான் இந்த வழக்கின் பிரதிவாதிகள் என்றால் சரிதான். நான் சொல்லும் 3041 1/2 சதுர அடி கொண்ட மனை 16.02.1957 ல் ராஜகோபால் மற்றும் கோவிந்த ராஜ் ஆகியோர் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். ராஜகோபால் எனது

தகப்பனார் ஆவார். கோவிந்தராஜ் பிரதிவாதிகளின் தகப்பனார் என்றால் சரிதான். அவர்கள் கிரையம் பெற்றது 3041 1/2 சதுர அடி என்ற போதிலும் 3283 சதுர அடியை அனுபவித்து வந்தனர் என்றால் சரிதான். ராஜகோபால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் இறந்துவிட்டார். அவருக்கு 5 மகன்கள் மற்றும் 3 மகள்கள் வாரிசுகள் ஆவார்கள். நான் மூத்த மகன். அதன் பிறகு சாரங்கன், பாலகிருஷ்ணன், சண்முகம், கோதண்டன், தனலட்சுமி, ஜானகி, மேகலா ஆகியோர் எனது உடன் பிறந்தவர்கள்.

(அறிவார்ந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)